திரு. தினகரன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுவாக குடும்பம் என்று சொன்னார். நீங்கள் ஏன் அதைப் பற்றிப் பேசுகிறீர்கள்? அதெல்லாம் ஒன்றும் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களைக் குறித்துப் பேசினால், உங்களுடைய குடும்பம் என்று சொல்லியிருந்தால், நீங்கள் பேச நான் அனுமதி தருவேன். அதற்கு நீங்கள் விளக்கம் சொல்லலாம். உங்களுடைய குடும்பம் என்று அவர் சொல்லவில்லை. அவர் ஒரு குடும்பத்தைக் குறிப்பிட்டு சாதாரணமாகச் சொன்னதை நாம் அப்படி ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அமருங்கள்.

(ஈ) சிறுபான்மை ஆங்கிலோ இந்திய பள்ளிகளுக்குப் பாதுகாப்பு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள்.*

DR. (TMT) NANCY ANN CYNTHIA FRANCIS: Hon'ble Speaker, Hon'ble and respected Chief Minister Thiru Edappadi K. Palanisamy Sir, (Interruptions) Hon'ble and respected Deputy Chief Minister (Interruptions) Thiru O. Panneerselvam Sir, thank you for this opportunity given. My beloved Amma who still lives in all of us had always a special place for the Anglo Indian Community and… (Interruptions)

(மாண்புமிகு உறுப்பினர் திரு. டிடிவி தினகரன் நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள்.*

DR. (TMT) NANCY ANN CYNTHIA FRANCIS: I am ever grateful to this great person, my beloved Amma, for nominating me for the second term and to represent the Anglo Indian Community. (Interruptions)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. தினகரன், நீங்கள் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள்* raise *செய்திருக்கிறீர்கள். அவை நடவடிக்கைகளைப் பாருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) ஒன்றுமில்லை, நீங்கள் உட்காருங்கள்.*

2018 ஜூன் 1]

DR. (TMT) NANCY ANN CYNTHIA FRANCIS: I am ever grateful to this great person, my beloved Amma, (Interruptions) for nominating me for the second term … (Interruptions) to represent the Anglo Indian Community in this august Assembly. (Interruptions)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. தினகரன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஏன் அப்படி நினைக்கிறீர்கள், உட்காருங்கள். திரு. தினகரன் அவர்கள் மைக் இல்லாமல் பேசியது அனைத்தும் அவைக் குறிப்பில் வராது.*

DR. (TMT) NANCY ANN CYNTHIA FRANCIS: I, being the nominated MLA of the Anglo Indian Community represent this burning issue regarding the merging of the Anglo Indian Board with the other Boards. In this context, I would like to say that the Anglo Indian Community is a religious and linguistic minority community of long standing and have contributed greatly to the field of education. (Interruptions)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திருமதி எஸ். விஜயதரணி, காங்கிரஸ் கட்சியின் சார்பில் எத்தனை பேருக்கு பேச வாய்ப்பு அளிக்க வேண்டும்? (குறுக்கீடு) இதெல்லாம் என்ன பேச்சு? (குறுக்கீடு) நீங்கள் வேண்டுமென்றே பிரச்சினை செய்வதற்கு அவைக்கு வருவதைப்போல் இருக்கிறது. (குறுக்கீடு) அதற்கு நான் என்ன செய்ய முடியும்? மணி என்ன ஆகிறது என்று பாருங்கள். இன்று மூன்று அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், நீங்கள் பேசுங்கள்.*

DR. (TMT) NANCY ANN CYNTHIA FRANCIS: In fact, I would say we have been one of the pioneers in the field of education. I also wish to state that I have met with the Hon'ble Minister for School Education on the 29th and 30th of May 2018 and he assured me that the minority, status of the Community would be maintained and I am thankful to you' Sir, for this. However, at this juncture, I appeal to this Government which is following the footsteps of our beloved Amma and has always been deciding favourably for the Anglo Indian Community to refrain from merging the Anglo Indian Board with the other Boards, which will definitely be a boon to my Community in helping to preserve the identity of our schools and our community. This is my humble request. Vanakkam, Nandri.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2018 ஜூன் 1

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி விஜயதரணி, கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் பேசியிருக்கிறார். (குறுக்கீடு) அவர்கள் பேசியதற்கு அமைச்சர் அவர்களைப் பதில் கூற விடுங்கள். (குறுக்கீடு) நீங்களே இந்தச் சபை முழுவதும் நடத்த வேண்டுமென்றால் எப்படி? உட்காருங்கள்.

முற்பகல் 11-45

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மைனாரிட்டியாக இருக்கின்ற ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளுக்கு எந்தப் பாதிப்பும் இருக்காது. நீங்கள் அச்சப்படத் தேவையில்லை. பள்ளிக் கல்வித் துறையில் பல்வேறு மாற்றங்களைச் சீரமைத்ததன் காரணமாக, உயர்நிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள், மெட்ரிக் பள்ளிகள் மற்றும் ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து அந்தப் பணிகளைச் சீரான முறையிலே செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. திருச்சியிலே, மதுரையிலே ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளை நடத்தக்கூடியவர்கள் இருக்கிற ஒரே ஆய்வாளரைச் சந்திப்பதற்காக சென்னை வர வேண்டியிருக்கிறது. அது தேவையில்லை. அங்கேயிருக்கின்ற மாவட்ட கல்வி அலுவலரிடத்திலே சென்று அந்தப் பணிகளை நீங்கள் மேற்கொள்வதற்கும், அந்தப் பணிகள் விரைந்து நடைபெறுவதற்கும் அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. ஆகவே, மைனாரிட்டி என்று சொல்லப்படுகிற பள்ளிகளை எந்தவித அச்சமும் இல்லாமல் நடத்துவதற்கு இந்த அரசு என்றைக்கும் தயாராக இருக்கிறது என்பது மட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்களுடைய இலட்சியப் பயணமே உங்களைப் போன்றவர்களைக் காப்பதற்காகத்தான். அதற்காகத்தான் இந்த அரசு இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எந்த அச்சமும் உங்களுக்குத் தேவையில்லை என்பதையும் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.